உ

சிவமயம்

# விசவத்தனை

# முருகப் பெருமான்

வெளியிட்டவர்:

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோயிற்
பரிபாலன சபையார்

உ

சிவமயம்

# விசவத்தனை முருகப்பெருமான்



ஆசிரியர்;

**பண்டிதர் திரு. அ. ஆறுமுகம் அவர்கள்**

அச்சுப்பதிவு:

**சுசீலாதேவி அச்சகம், சித்தன்கேணி.**

சௌமிய பங்குனி 2 15-3-70

# இந்நூலின் உள்ளே


முகவுரை

அணிந்துரை

சாற்றுகவிகள்

விசவத்தனை முருகப் பெருமான்

,, ,, ,, பதிகம்

,, ,, ,, ஊஞ்சல்

,, ,, ,, சடாட்சர கீதம்

# முகவுரை

முருகப்பெருமான் மாயையின் மைந்தர்* மூவரையும் போரில் தொலைத்தருளிய தேவசேனாபதி. அவர் படைவீடு களாகக் கொண்டவை ஆறு இடங்கள். அவைதிருப்பரங் குன்றம், திருச் செந்தூர், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர் சோலை என்பன. முதல் நான் கும் ஒவ்வொரு தலத்தை மாத்திரம் குறிக்கும் பெயர்கள். பின் னிரண்டும் பலபல குன்றுகளுக்கும் சோலைகளுக்கும் பொது வான பெயர்கள். விசவத்தனைத் தலம் பழமுதிர்சோலை யாகும். எனவே படைவீடுடைய பரமனுக்கு உவப்பான தலம் விசவத்தனை. அவர் இங்கமர்ந்திருந்து இயற்றிவரும் அருட்செயல்கள் அவருடைய மூர்த்திகரச் சிறப்பை யுணர்த்துவன. இங்குள்ள ஸ்கந்த புஷ்கரிணி என்ற தடாகம் தீர்த்தவிசேடத்தைக் குறிக்கும். எனவே மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றாலும் விசேடமுடையது விசவத்தனைத் திருப்பதி. விசேடதலங்கள் பலவற்றுக்கும் வரலாறு, அருட் பாக்கள் இருக்கின்றன. எனவே விசவத்தனைக்கும் வரலா றும் பாடல்களும் இருக்கவேண்டும் என்ற ஆசை அடியேன் உள்ளத்தில் நெடுங்காலமாக உண்டு. அதனால் முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முருகப் பெருமானை - தன்னை நன்றாகத் தமிழ்செய்யுமாறு என்னைப் படைத்த இறைவனை முப்பது வருடங்களுக்கு முன்னமே இரட்டைமணிமாலை, தசாங்கம், கீர்த்தனங்களைப்பாடி வெளிப்படுத்தித்துதித் தேன். அவற்றின் வேறாய் இப்போது தலவரலாறு, அருட் செய்திகள், ஊஞ்சல், பதிகம், கீதம் என்பனவற்றை இணைத்து 'விசவத்தனை முருகப் பெருமான்' என்று பெய ரிட்டு வெளியிடக் கருதினேன்.

காகிதவிலை, மைவிலை, கூலி என்பன மிகவும் அதிகரித் துள்ள இவ்வேளையில் விரிவான நூலெழுதி, அதிகவிலைக்குக் கொடுப்பது முறையாகாது எனக் கருதினேன். பிரதான

---

* மாயை காரியமாகிய மும்மலங்களையும் தொலைத்து, ஆன்மாக்களை இரட்சிக்கும் அருட்செய்கையே முருகனது போர். நினைப்பவர் மனமே அவன் கோயில்கொண்ட படைவீடு.

விஷயங்களைப் புலப்படுத்தித் தெளிவும் விளக்கமுமமையச் சுருக்கமாக எழுத நேர்ந்தது. இதனை வெளியிடுமாறு பலவகையிலும் ஆர்வங்காட்டித் தூண்டுகோலாயிருந்தவர் கோயில் அர்ச்சகர் எங்கள் தவத்திரு. ச. வைத்திஸ்வர ஐயா அவர்களே. இதனை வெளியிடும் பொறுப்பைப் பரி பாலனசபையார் ஏற்றனர். வெளியீட்டு விழா நடாத்திச் சிறப்பிக்கப் பெரியோர்களும் நண்பர்களும் மிகவும் ஆர்வம் காட்டி முன்வந்தனர். பண்பும் நண்பும் இனிய அன்பர்கள் திருவாளர்கள் சி. ஆறுமுகசாமி, க. வாமதேவன் முதலா ஞேர் பல வழிகளிலும் துணைபுரிந்தனர்.

இந்நூலின் சுருக்கமான இயல்புக்கமைய, எமது பேரன் பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய பண்டிதமணி அவர்களும், வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச்சங்க அறிஞர்களும் அணிந்துரையும் பாடல்களும் உவந்து நல்கினர்.

இதனைச் செம்மையாகவும் விரைந்தும் திருப்தியுற அச்சிட்டுத் தந்தவர்கள் சித்தன்கேணி சுசீலாதேவி அச்சக உரிமையாளரும் ஊழியருமாவர்.

இந்நூல் வெளியீட்டுவிழாவில் தலைமைதாங்கியும், நூலை வெளியிட்டுச் சிறப்புரை நிகழ்த்தியும், இன்னிசை விருந்து நல்கியும், நூலாய்வுரை வழங்கியும், முதற்பிரதிகள் வாங்கியும் அன்பும் அறிவும் வண்மையும் வாய்ந்த சான் ரேர் பலரும் கௌரவித்தனர்.

இவர்கள் அனைவருக்கும் அடியேனது மனமார்ந்த வணக்கமும் நன்றியும் உரியன.

தோன்ருத் துணையாயிருந்து இந்நூல் இனிது நிறை வேறத்திருவருள்பாலித்த எம்பெருமான் கருணைத்திறத்தை நினைந்துநினைந் துணர்ந்து நெகிழ்ந்து துதிக்கின்றேன்.

வணக்கம்.

எல்லோரும் வாழ்க; இன்பமே சூழ்க.

பண்ணுகம்,

சுழிபுரம். 12-3-70. அ. ஆறுமுகம்

# அணிந்துரை

முதுபெருந் தமிழறிஞரும், சைவசித்தாந்த சாகரமும், முன்னாள் சைவாசிரியகலாசாலைத் தமிழ்ப் பேராசிரியருமாகிய

**பண்டிதமணி உயர்திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்கள்**

எழுதியது:

பண்டிதர் அ. ஆறுமுகம் அவர்கள் தமிழார்வமும் கடவுட் பக்தியும் மிக்கவர். விசவத்தனை முருகப்பெருமானைப்பற்றி அவர் எழுதிய வரலாறு மேற்குறிப்பிட்ட இரண்டற்கும் எடுத்துக் காட்டாயமைந்திருக்கின்றது.

முருகப் பெருமான் பதிகம், ஊஞ்சல் இரண்டும் பண்டிதர் அவர்களின் பக்திக்கனிவுகள்; கவிதை நயம் வாய்ந்தவை.

சைவத் தமிழ் உலகு பண்டிதர் அவர்களைப் பேணும் முறையிற் பேணிப் பயன் செய்வதாக.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.
12-3-70.

சி. கணபதிப்பிள்ளை

# சாற்று கவிகள்

## வட்டுக்கோட்டைத் தமிழ்ச்சங்க அறிஞர்கள் கூறியவை.

சங்கத்தலைவர் பண்டிதர் திரு. க. மயில்வானம் அவர்கள்

சுந்தரஞ்சேர் யாழ்நாட்டின் மேலைவரு
பண்ணுகம் தோற்றம் எய்த
வந்தவிச வத்தனையில் முருகனருள்
விளக்கமெலாம் வரைந்து கொண்டு
நந்தியசீர் அறிஞருளார் நற்பனுவல்
இதுவென்றே நவிலத் தந்தான்
எந்தமது பேரன்பன் ஆறுமுகப்
பண்டிதராம் ஏந்தல் தானே.

துணைச்செயலாளர்,
பண்டிதை திருமதி பொன்னுத்துரை பாக்கியம் அவர்கள்

பேரார் விசவத் தனைமுருகப் பெருமானென்னும் அருள்நூலை
ஆரா அன்பா லென்குரவர் அன்பு நிறைந்த ஆசிரியர்
சீரார் ஆறு முகமவர்கள் செய்தார்; பெரியீர்! தாயீரே!
நேராய் ஏற்றுப் போற்றிடுவீர்; நிறைவாழ் வெய்தி
மகிழ்வீரே.

பண்டிதர் திரு. பரமகுரு இராசகுரு அவர்கள்

தண்ணூர்விச வத்தனையில் அமர்ந்தருளும் வேலன்
தலவரலா றெல்லாரும் அறிந்திடுதல் வேண்டிப்
பண்ணூரின் தமிழ்ப்பாவால் மாலைபல புனைந்து
பக்தியருட் சுவைகலந்து பாங்குடனே தந்தார்
நண்ணூரும் மதிக்கின்ற பண்புடனே வாழும்
நம்மாறு முகனூரிந் நூலென்றும் வாழ்க
விண்ணூரும் புகழ்பரப்பி வேற்பெருமா னருளால்
மிகவுவந்து யாவருமேற் றினிதுகற்று வாழ்க.

உ

சிவமயம்

# விசவத்தனை முருகப் பெருமான்

## தலத்தின் நிலையம்

யாழ்ப்பாண நகரத்திலிருந்து சங்கானை வழியாகக் காரைநகர் போகும் வீதியில் ஒன்பதாவது மைலில் உள்ளது பண்ணாகம் என்னும் சிறிய கிராமம். பண்டுதொட்டு இவ்வூர் ஆலங்காடு என வழங்கி வந்தது. காரைக்காலம்மையார் இறைவனுடைய திருநடனத்தைத் தரிசித்துக் கொண்டிருந்த தலம் ஆலங்காடு. அந்தத் தலத்திலிருந்து வந்து இங்கே குடியேறிய முன்னோர்சிலர் இந்த இடத்துக்கும் தாம்பிறந்த திருவாலங்காடு என்றபெயரைச் சூட்டியிருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு. பண்புடையோர் பலர் வாழ்ந்த இப்பண்ணாகப்பதி சங்கானைக் கோயிற் பற்றுள் அடங்கும். ஏறக்குறைய மூன்றுமைல் சுற்றளவும் ஒருசதுரமைல் பரப்புமுள்ள இவ்வூரில் வைரவசுவாமிக்கும் காளிதேவிக்கும் கோயில்கள் பல உள்ளன. எனினும், இவ்வூரார் அனைவரும் விசவத்தனை முருகப் பெருமானையே தமது குலதெய்வமாகக் கொண்டு வழிபடுவர். மேலே குறிப்பிட்ட ஒன்பதாவது மைல்கல்லின் அருகே வடக்குத் திசை நோக்கிச் செல்வது விசவத்தனை முருகமூர்த்தி வீதி. அவ்வீதி வழியாக ஐந்நூறு யார் தூரம் வரை செல்ல முருகப் பெருமான் எழுந்தருளியுள்ள விசவத்தனைத்தலம் தோன்றும். தூலலிங்கமாகிய கோபுரத்தைத் தரிசித்துக் கோயிலின் தெற்கு வீதியாற் சுவாமி சந்நிதானத்துக்குச் செல்வோரை வலப்பக்கத்திலுள்ள ஆனந்த ஆச்சிரமத்திற் குடியிருக்கும் அர்ச்சகர் தவத்திரு வைத்தீஸ்வரஐயர் அவர்களும் மனைவி மக்களும் மலர்ந்த முகத்துடன் வரவேற்பர். அப்பாற் செல்ல

---

★ இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.

இடப்பக்கத்தில் பேரொளியுடன் விளங்கும் ஆறுமுகசுவாமி சந்நிதியில் நின்று தோத்திரஞ் செய்து பின் இப்புறம் பார்த்தால் பூந்தோட்டமும் பலவகைப் பயிர்களுடைய பரந்த புலமும் கண்ணுக்கு நல்விருந்தாகும். சிறிது நேரம் இக்காட்சியில் ஈடுபட்டு அருகேயமைந்த கிணற்றிலோ கேணியிலோ கால்முகங் கழுவி முருகப்பெருமான் சந்நிதியை அடைந்து தலையாரக்கும்பிட்டு அருள் பெறலாம்.

## தலவரலாறு

ஆதியில் விசவத்தனையில் வைரவசுவாமி ஆலயமே இருந்தது இற்றைக்கு இருநூறு வருடங்களுக்கு முன் வாழ்ந்த கதிர்காமர் என்பவரின் முன்னோராலேயே இந்த வைரவ சுவாமி பிரதிட்டை செய்யப்பட்டு விளக்கேற்றி வழிபடப் பட்டு வந்தது. ஆண்டு தோறும் வைகாசி மாதத்தில் வரும் முதலாம் செவ்வாய்க்கிழமையில் விசேஷ தீபம் ஏற்றப்பட்டு அடுத்த செவ்வாயில் வாழைக்குலைகள் கட்டி, பொங்கல் நடத்தி, விசேஷ விழா கொண்டாடப்படும்.

அக்காலத்தில் விசவத்தனைத் தோட்டங்களில் வாழை, மரவள்ளி, கத்தரி, பூசினி, புகையிலை முதலான பயிர்வகைகள் மிகச் செழித்து வளர்ந்து நல்ல பயன் கொடுத்தன. தோட்டங்களில் ஆங்காங்கு ஆடுகள் மாடுகள் பட்டிகளில் அடைக்கப்பட்டிருக்கும். காத்தற் கடவுளாதலால் கேத்திர பாலன் என்னும் பெயர்பெற்ற வைரவப் பெருமான் இரவு நேரங்களில் தோட்டங்கள் வளவுகளுக் கூடாக நடமாடிப் பல அருட்காட்சிகளைக் காட்டியதாக முதியோர் பலர் பலப்பல செய்திகள் கூறுவர். விளைபொருள்களையோ கால் நடைகளையோ கவர்ந்து செல்லவரும் கள்வர்களை வைரவப் பெருமான் வெருட்டித் துரத்துவார். பொருள்களுக்கு உரியவர்கள் உறங்கும் போது களவு நடைபெறவிருப்பதை அவர்

★ விசவத்தனை என்ற பெயருக்கு எலுமிச்சந் தோட்டம் என்பது பொருளென்றும், பண்ணுகம் என்பது நல்ல ஊர் என்ற பொருளுள்ள சொல்லென்றும் சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி செய்த பன்மொழிப்புலவர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் பால் நேரிற் கேட்டோம். தேரியத்தனை, மின்னியத்தனை என்ற பெயருள்ள தோட்டங்கள் பிறவும் விசவத்தனைக்கு அயலிலுள்ளன.

களுக்குக் கனவிலே தெரிவிக்க, அவர்கள் உடனே விழித்தெழுந்து தத்தம் தோட்டங்களுக்குச் சென்று கையும் மெய்யுமாகத் திருடரைப் பிடிப்டார்கள். ஆளரவம் கேட்டுத் திருடர்கள் களவாடிய பொருள்களை விட்டுவிட்டு ஓட்டமெடுப்பதுமுண்டு, இப்படி எத்தனையோ அருட்செயல்களை அப்பெருமான் செய்ததாக முதியோர் கூறுவர்.

இந்த வைரவசுவாமி பிரதிட்டை செய்யப்பட்டிருந்த இடத்துக்கு வடக்குப் பக்கத்தில் மேலே குறிப்பிட்ட கதிர்காமரின் மகன் விசுவநாதர் உதவிய நிலத்தில் இவ்வூரவர்கள் சிறிய கோயிலொன்று அமைத்து முருகப் பெருமானை பிரதிட்டை செய்து வழிபட்டு வந்தனர். அந்த நாளில் சிறிய மடாலயமாய், கந்தபுராணம் படித்துப் பொருள்கூறி வழிபடும் இடமாய் இந்தக் கோயில் இருந்து வந்தது.

இற்றைக்கு எழுபத்தைந்து ஆண்டுகளுக்குமுன் இம்மடாலயம் புதுப்பிக்கப்பட்டது; கும்பாபிஷேகம் நடந்து அலங்காரத் திருவிழாக்கள் நடைபெற்று வந்தன. மேலே குறிப்பிட்ட கதிர்காமர் விசுவநாதருடைய மக்களிலே ஒருவர் சின்னட்டியர். அவருடைய மூத்தமகனை செல்லப்பா அவர்கள் இவ்வூர்ப் பெரியார் பலரின் உதவியுடன் சைவாகம முறைப்படி கர்ப்பக்கிருகம், மகாமண்டபம், நிருத்தமண்டபம், அர்த்தமண்டபம், வசந்தமண்டபம் முதலியன அமைத்துக் கொடித்தம்பம் நிறுவி 1922ஆம் ஆண்டில் மகாகும்பாபிஷேகம் நடத்தினர்கள். ஆண்டுதோறும் பங்குனி உத்தர நாளில் தேர்த்திருவிழா அமையும் வகையில் உபயகாரர்களை ஏற்படுத்திப் பத்துத் திருவிழாக்களை நடைபெற்றுவர ஒழுங்கு வகுத்தார்கள்.

வர்த்தகத் தொழிலில் ஈடுபட்டுப் பொருளீட்டிய திரு. செல்லப்பா அவர்கள் கோயிலை நடத்துவதற்காகத் தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் தியாகம் செய்தார்கள் ஊரவரின் பெருளுதவி சரீர உதவிகளைப் பெற்று, அவர்கள் கருத்தை மதித்து, இயன்றவரை கோயிலைச் செம்மையாகப் பரிபாலனஞ் செய்தார்கள். அவரால் எழுதப்பட்ட கோயில் நிர்வாகம் சொத்துரிமை பற்றிய சாசனத்தின்படி அவரு

டைய சந்ததியில் மூத்த ஆண் சந்ததியாருக்கே பரிபாலன உரிமை சேருவதாயிருந்தது. திரு. செல்லப்பா அவர்கள் 1945-ம் ஆண்டில் காலமானார். அவருக்கு ஆண் சந்ததி இல்லாமையால் அவருடைய சகோதரர் திரு. நாமுத்துவும், அவருக்குப்பின் அவருடைய மூத்தமகன் திரு. மாணிக்கமும் கோயிலை நடத்தி வருவாரரா்யினர்.

கோயில் கர்ப்பக்கிருகத்தில் ஏற்பட்ட சிதைவு காரணமாக 1948ஆம் ஆண்டிலே சுவாமி வாலஸ்தாபனஞ் செய்யப்பட்டது. மக்களின் உடலுழைப்பும் பொருளுதவியுங் கொண்டு கர்ப்பக்கிருகவேலை நடைபெற்றுவந்தது. மேலும் மேலும் பணம் வேண்டியிருந்தது. பணஞ்சேகரித்து வேலையை நடத்திமுடிப்பதில் காலதாமதமானமையினுல் வழிபடுவோர் நடத்திய மகாசபைக் கூட்டத்தில் திரு. மாணிக்கம் தமது நிர்வாக உரிமையை ஒப்படைத்தார். பண்ணுகம் விசவத்தனை முருகமூர்த்தி கோயிற் பரிபாலன சபையார் 1954-ம் ஆண்டு ஆவணிமாதச் சோதி நன்னளில் கும்பாபிஷேகம் நடாத்தி, அடுத்து நாற்பத்தைந்து நாள் மண்டலாபிஷேகம் நடாத்திப் பின் விழாக்கள் பூசைகளை ஒழுங்காக நடாத்தி வருகின்றனர்.

## கோயிலின் திருப்பணிகள்

இந்தக் கோவிலுக்கான பலவகைத் திருப்பணிகளும் இக்கிராமத்தவராலேயே செய்யப்பட்டு வருகின்றன. வாகனங்கள், விளக்குகள், மணிகள், குடைகள், ஆபரணங்கள் முதலான பல திருப்பணிகளைத் தனித்தும், மண்டபங்கள், சகடை, தேர் போன்றவற்றைப் பலர் சேர்ந்தும் செய்து உதவினர். திரு. இராமநாதர் கதிரவேலு அவர்கள் ஆறுமுகசுவாமி வார்ப்பித்து மண்டபமும் அமைத்தார். திரு. ஆறுமுகம் துரைச்சாமி அவர்கள் வெளிப்பிரகார மேல் வேலைத் திருப்பணியைச் செய்தார். இவர்களிருவரும் பெரும் பொருட் செலவில் குறித்த திருப்பணிகளை நிறைவேற்றினர். மக்கள் உபயமான சித்திரத் தேர்த்திருப்பணிக்கு ஐம்பதினு யிரம் ரூபா வரை செலவாயிற்று.

கோயிலின் முன் மண்டப நிலம் கந்தர்வேலுப்பிள்ளை என்பவராலும், பூந்தோட்டநிலம் திரு. நமசிவாயம், திரு. பொன்னம்பலம் கனகசபை என்பவர்களால் தருமசாசனம்

செய்யப்பட்டவை. கோயிலின் வடக்கு வீதி நிலமும் கோயிலுக்கென்றே குமாரு சின்னத்தம்பி என்பவர் மலாய்நாட்டிலிருந்தபோது அனுப்பிய பணத்துக்கு வாங்கப்பட்டதாயினும், அந்தவேளையில் பணத்தைப் பெற்றவர் அதனைக் கோயிலாதனமாக எழுதாமல் அவரின்பேரில் எழுதிவிட்டதனுல் குறித்தநிலம் அவரின் உரிமைக்காரரின் ஆட்சியிலுள்ளது. அந்த நிலமும் கோயிலுக்குச் சேருவதே தருமமாகும்.

கோயிலுக்கு அவசியம் செய்யவேண்டியனவான திருப்பணிகள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. கோயில் மகாமண்டபமும் நிருத்தமண்டபமும் தாமதஞ்செய்யாது புதுக்கியும் திருத்தியும் கட்டப்படவேண்டியவை. கூரையும் சுவர்களும் பழுதடைந்த நிலைமையில் வசந்த மண்டபம் கிடக்கின்றது. மடைப்பள்ளி, களஞ்சிய அறை, வாகனசாலை என்பன மழைநீர் உள்ளே போகத்தக்க விதத்திற் கிடத்தலின் பலவகையிலும் நட்டமேற்படுகின்றது; இவற்றைப் புதுப்பித்து அமைக்கவேண்டும். நவக்கிரகங்களுக்குக் கோயில் தாபித்ததைப்போல விநாயகப்பெருமானுக்கும் கோயில் தாபிப்பது அவசியமானதாகும். பெரும் பொருட்செலவிற் செய்த தேருக்கான பாதுகாப்பு மண்டபத்துக்குத் தகரத் தட்டிகள் அமைக்க ஆறுயிரம் ரூபாவரை தேவை. பூந்தோட்டம் எந்நாளிலும் பூக்கள் குறைவில்லாது பெறக்கூடியதாகப் பேணப்படவேண்டும். கோயிற் பூசகரின் வீட்டிலும் செய்யவேண்டிய திருத்தங்கள் உள்ளன.

கோயிலைப் பரிபாலனஞ் செய்வது மிகப்பெரியதவம், அது பலபிறப்புகளிற் சேகரஞ் செய்த அருந்தவம்; வாள் முனையில் நின்று செய்யும் மாதவம் போன்று கோயிற்பரிபாலனமும் நடுவுநிலை, தருமம் தவருது செய்யப்படவேண்டியது. இத்திருப்பணிகளுக்கென இவ்வூரவர்களிடம் அடிக்கடி பணம் சேர்க்கிறோம். கடவுள்பக்தியும் ஈகைச்சிறப்பும் உடையவர்கள் எத்தனை தரம் கேட்டாலும் மனமுவந்து கொடுக்கிறார்கள். கொடாதவர்கள் இருப்பராயின் அவர்களின் உள்ளமும் இளக எம்பெருமானே அருள்புரிய வேண்டும். கோயிற்பூசைகள் முறையாகவும் நிறைவாகவும் நடந்தால் ஊர்மக்கள் வாழ்வில் மனநிறைவு பெறுவர்.

## கலியுகவரதன்

உலகில் செல்வர் சிலர், வறியார் பலர். முற்பிறப்பில் தானம் தவம் செய்தவர்களுக்கே இப்பிறப்பில் செல்வம் வாய்க்கும். செல்வம் நிலையாய் நில்லாது; செல்வம் செல்வமென்று சென்றுவிடும், செல்வத்தைப் பெற்றதன்பயன் நல்லவழியில் உதவுதலே.

"உடாஅதும் உண்ணுதும் தம்முடம்பு செற்றும்
கெடாஅத நல்லறமுஞ் செய்யார் — கொடாஅது
வைத்தீட்டி னார்இழப்பர்..." அவர்கள் ஆவி பிரியும் போது காதற்ற ஊசியும் கடைவழிக்குத் துணையாகவரப் பெருது அனைத்தையும் விட்டுப்போவர். போகும் வழிக்குத் தருமமேதுணை, இதனை ஒரு சம்பவத்தாற் குறிப்பிடுவோம்.

ஓர் ஊரிலே பெரிய செல்வந்தனொருவன் இருந்தான். அவன் ஒருவருக்கும் ஒன்றும் ஈயான்; எச்சிற் கையாலே காகமுந் துரத்தான். அப்படியான உலோபி முதுமையுற்று நீண்டகாலம் நோய்வாய்ப்பட்டுச் சொல்லொணுத் துன்பத்திற் கிடந்தான். ஆறுத்துன்பத்திலழுந்திய அவன் அந்தணருக்குப் பசுத்தானம் செய்தால் ஆவி அமைதிபெறும் என்று கற்றவர் ஒருவர் கூறிய வார்த்தையை அந்தவேளையிலே நம்பினன். எனினும் உத்தமமான பசுவைத் தானமாகக் கொடுக்க அவனது இயல்பான உலோப குணம் தடுத்தது. மெலிந்து நடை தள்ளாடி விழுந்து போகும் நிலையிலிருந்த கிழப்பசுவொன்றை மலிவான விலைக்கு வாங்குவித்துத் தானஞ் செய்தான். பசுவின்வாலைப்பிடித்து அந்தணனிடம் கொடுத்ததும் அவனுடைய ஆத்மா அமைதியாகப் பிரிந்தது. அந்தணனே அந்தப் பசுவை முன்னுல் ஒருவர் இழுக்கப் பின்னுல் தான் தள்ளிக் கொண்டுமிகச்சிரமத்துடன் நடத்திச் சென்ருன். அந்தப்பசு பத்து நாழிகை நேரம் மட்டும் உயிருடனிருந்து இறந்தது. முன்னரே உயிர்நீத்த அந்த உலோபி இந்திரலோகத்தில் கற்பகதரு நீழலில் ஐஸ்வரியம் எல்லாம் எய்தி இன்பமுற்று இருந்தான். தனது இன்பநிலை இன்னும் ஐந்து நாழிகையில் அழிந்து, பின் கொடியநரகக் குழியில் விழுந்து மீளாத்துன்பத்தில் அமிழ்ந்த நேரிடுமென்று அங்

குள்ளார் ஒருவரால் அறிந்தான். நடைப்பிணமான பசுவை அந்தணனுக்குத் தானஞ்செய்ய அது அவனிடம் வாழ்ந்த பத்து நாழிகைமட்டுமே தனக்கு இந்திரச் செல்வத்தோடு இயைந்த வாழ்விருக்கும் என்று தெரிந்ததும் உடனே அவன் தனது ஆணையின்கீழுள்ள காமதேனுக்களையும் கன்றுகளையும் கொள்ளைகொள்ளையாக அந்தணருக்குத் தானமாகக் கொடுத்தான். அவ்வாறு செய்த தானப் பேற்றினால் அவன் இந்திரச் செல்வம் நெடுங்காலம் இருந்து அனுபவித்தான்.

இந்தக் கதைமூலம் நாம் அறிவது என்ன? ''பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லை பிறந்து மண்மேல் இறக்கும் பொழுது கொடுபோவதில்லை; இடைநடுவே குறிக்குமிச் செல்வம் சிவன்தந்ததென்று இல்லோர்க்கும் நல்லோர்க்கும் கொடுத்தல் வேண்டும். அதனை நமக்கு அருளிய பெருமானின் திருவுள்ளமும் அதுவேயாகும். உண்மை இதுவாக இன்று நாம் காண்பதென்ன? எப்படியாவது வல்லமையாய்த் தேடிக்கொள்வோம் என்று சிலர் முயலுகின்றனர். பொருள் இல்லாதவர்களோ பசிக்கொடுமை தாங்கமாட்டாது உடையவர்கள் இருக்குமிடந்தேடியலைகின்றனர். ''நாய்கடிக்கும் கவனம்'' என்ற அறிவித்தலைத் தங்கள் வீட்டுப் படலையிற் பொருத்தி விட்டுச் செல்வர் சிலர் உள்ளேயிருப்பர். ஏழைகள் எவராவது வந்தால் தொந்தரவாக இருக்குமென்று தங்கள் நாயை ஏவி விடுவதுமுண்டு. ''பிச்சை வேண்டாம் நாயைப்பிடி'' என்று அவலக்குரலிட்டு அவ்விடம் விட்டு அகலுவர் ஏழைகள். யார்தமக்கு உதவிபுரிவார் என்று அங்கலாய்த்துப் பழுமரந் தேடித் திரியும் பறவைகளைப் போலக் கொடையாளிகளைத் தேடித் திரிகின்றனர். அப்படி அந்தரிப்பவர்கள் கேட்டவையனைத்தும் கொடுக்குமொருவர் இன்ன இடத்தில் இருக்கிறாரென்றால் அவரைக்காணவும், கண்டுதம் வறுமைதீரவும் பெற யார்தாம் விரும்பார்? ''யாம் இருக்கப் பயம் ஏன்'' என்று தேறுதல் கூறி வேண்டுவார் வேண்டியவையெல்லாம் ஈந்தருளும் பெருமான் விசவத்தனைத்தலத்தில் எழுந்தருளியுள்ளாரென்று அறிந்தவர்கள் —நம்பியவர்கள்—அவ்விடம் விரைந்து சென்று பெருமானைக் காணவும் தொழவும் முந்துதல் இயல்பே. நமக்கு

அருள்புரிவதற்கென்றே எம்பெருமான் நாம் இருக்கும் இடந்தேடி வந்து இந்த விசவத்தனைத் தலத்தில் அமர்ந் தருள் புரிகின்றார். அறம் புறமாக நடக்கும் இந்தக் கலியு கத்திலும் வேண்டுவார் வேண்டுவனவெல்லாம் அருளுத லால் அப்பெருமான் கலியுக வரதன் என்று அழைக்கப் படுகின்றார். என்னென்ன வெல்லாமோ கேட்டுப் பெற வேண்டுமென்று முற்பட்டு வந்தவர்கள் அப்பன் சந்நிதியில் அவனைக் கண்டு கண்ணும் மனமும் குளிர்ந்து கேட்கவேண் டியவற்றையெல்லாம் மறந்து விடுகின்றனர். கும்பிடுகின்ற இன்பமேயன்றி வீடுபேறு கூடவேண்டாத வீர நிலையை எய்துகின்றனர். எம்பெருமான் திருவருளிருந்தபடி என்னே!

## வைத்தியநாதன்

பிறந்தாரனைவருக்கும் பிணியும் கவலையும் பிரியாது நிற் பவை. உடம்பையும் உயிரையும் உள்ளத்தையும் பற்றி வருத்துகின்ற பிணிகள் எண்ணில்லாதவை. உடல்நோய் மனநோய் உற்றவேளைகளிலே நாம் வைத்தியர்களைத் தஞ்ச மடைகின்றோம். வைத்தியர்களால் முயன்றும் தீர்க்கமுடி யாத நோய்கள் பல. அவ்வாறு வைத்தியர்களாற் கைவிடப் பட்ட பலர் எம்பெருமானை அல்லும் பகலும் அனவரதமும் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி வழிபட்டு நோய்தீரப் பெற்றுள்ளனர். உடல்நோய் மனநோய்களை மட்டுமன்றி ஆத்மாவைப்பற்றிய ஆணவமென்ற தீராநோயையுந் தீர்த் தருளுபவராதலினாலேயே எம்பெருமானுக்கு வைத்திய நாதன் என்றும் பெயருண்டு. ''தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது.''

## இனியவன்

நாமனைவரும் இன்பத்தை விரும்புகிறோம்; துன்பத்தை வெறுக்கின்றோம். நமக்கு இனியவர், இன்பந்தருபவர் எவ ரென்று தேடுகிறோம்; அங்கலாய்க்கின்றோம். நொந்து சும ந்து நம்மைப் பெற்று, தமது கண்ணையும் உயிரையும் போல நம்மைப்பேணி, முகம்மேல் முகம்வைத்து முத்தாடிச் சீராட்டி வளர்த்த அன்னையார் நமக்கு மிகவும் இனியவ ரன்றோ? நமக்கு உவப்பான உணவு உடை அணிகளைத்

தேடித்தந்து, நம்மை மகிழ்வித்துச் சிறப்பித்ததோடு துள்ளித் திரிகின்ற காலத்திலே நம் துடுக்கடக்கிப் பள்ளியில் வைத்துக் கற்பித்து, நம் நல்வாழ்வுக்கு உறுதுணையாயிருந்துவரும் தந்தையாரும் நமக்கு இனியவரன்றோ? இவர்களைப்போலவே நமக்கு இனியராயிருந்த, இருக்கின்ற பெரியோரும் துணைவரும் பலருளர். தம்முயிருக்கு அந்தரமான நிலைமையோ அவசமோ உற்றவேளையில் இவர்கள் அனைவரும் எங்களை மறப்பர்.

''எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார் ஏவர் நல்லார்;? எம்மாடு சும்மாடாம்?'' நமக்கு மிகமிக இனியவர் நாமே. அப்படியினிய நம்மிலும் நமக்கு இனியவன் எம்பெருமான்.

''என்னில் யாரும் எனக்கினி யாரில்லை
என்னி லும்இனி யாவொரு வன்உளன்'' என்பது

அப்பர் சுவாமிகள் அருள்வாக்கு. இந்தப்பிறப்பில் மட்டுமன்றி நாம்எடுத்த எல்லாப் பிறப்புகளிலும் நமக்குத்தோன்றாத் துணையாய் இருந்து நம்மை ஈடேற்றியருளும் பெருமானிலும் இனியவர் யாருமுண்டோ?

## பெருமான் பெருமை

எம்பெருமானுடைய பெருமை நினைப்புக்கும் சொல்லுக்கும் எட்டாதது. படைத்தல் காத்தல் அழித்தல் என்ற முத்தொழில்களைச் செய்யும் மும்மூர்த்திகளுக்கும் முதலான-காரணமான-மூர்த்தி அவர். அருவமும் உருவும், ஆகிஅநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்பிரமமாய் நின்ற சோதிப்பிழம்பு உலகமுய்யக் கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டு, தோன்றாமல் தோன்றியது. பரமசிவத்துக்கும் பன்னிருகரனுக்கும் பேதமில்லை. சரவண தடாகத்தில் அறுமுகக் குழந்தையை அறிமுகஞ் செய்யும் போது பரமசிவனார் பார்வதிக்குக் கூறும்,

''நன்முகம் இருமூன் றுண்டால் நமக்கவை தாமே கந்தன்
தன்முக மாகி யுற்ற; தாரகப் பிரம மாகி
முன்மொழி கின்ற நந்தம் மூவிரண் டெழுத்து மொன்றாய்
உன்மகன் நாமத் தோரா றெழுத்தென உற்ற அன்றே.

எம்மாடு சும்மாடாம்? — எந்தச் செல்வம் நல்லசெல்வம்?

ஆதலின் நமது சக்தி யறுமுக னவனும் யானும்
பேதக மன்றால் நம்போற் பிரிவிலன் யாண்டும் நின்றான்
ஏதமில் குழவி போல்வான் யாவையும் உணர்ந்தான் சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க் கருள வல்லான்

என்ற பகுதிகள் கொண்டு தெளியலாம்.

பிறப்பால் மனித உடல் தாங்கியவரில் குணத்தால் தேவராகவும் அசுரராகவும் பலர் உள்ளனர். அந்நாளில் மாத்திரமன்றி இந்நாளிலும் தேவரும் அசுரரும் நமக்குள்ளேயே உள்ளனர். வடதுருவமும் தென்துருவமும் போன்று இருசாராரும் ஒருவகையிலும் பொருந்தாதவர்கள். மாயையின் மக்களாகிய சூரன் சிங்கன் தாரகன் என்ற மூவரும் "நான் பிரமம்" என்ற இறுமாப்புக் கொண்ட அசுரர்கள். சூரனது அரசிருக்கையாகிய மகேந்திராபுரிக்கு முருகப்பெருமானது தூதுவராக வீரவாகுதேவர் சென்று நீதி, தர்மம் இவற்றையெடுத்துக் கூறித் தேவரைச் சிறையினின்றும் விடுதலை செய்யுமாறு கேட்டார். இணங்காத சூரன் வீரவாகு தேவரைத் தண்டிக்க முற்பட்டபோது அவர் அவனுடைய நகரைச் சிதைத்து அசுரவீரர்களைத் தொலைத்து முருகப்பெருமானிடம் திரும்பினர். கடவுளிடம் பெற்றவரங்களைக் கொண்டு கடவுளுடனேயே போட்டிபோடுகின்ற அளவுக்கு விவேகமற்றவனாகிய சூரன் போருக்கான ஆயத்தங்களை மேற்கொண்டான். தனது தம்பி, மக்கள், மந்திரிமாரைக் கூட்டி மந்திராலோசனை செய்தான். அப்போது தம்பியாகிய சிங்கமுகாசுரன் முருகப்பெருமானுடைய பெருமையைச் சூரனுக்கெடுத்துப் பின்வருமாறு கூறினான்.

ஞானந் தானுரு வாகிய நாயக னியல்பை
யானும் நீயுமாய் இசைத்துமென் றாலஃது எளிதோ
மோனந் தீர்கலா முனிவருந் தேற்றிலர் முழுதுந்
தானுங் காண்கிலன் இன்னமுந் தன்பெருந் தலைமை

வேதக் காட்சிக்கும் உபநிடத் துச்சியில் விரித்த
போதக் காட்சிக்கும் காணலன்; புதியரிற் புதியன்;
மூதக் கார்க்குமூ தக்கவன்; முடிவிற்கு முடிவாய்,
ஆதிக் காதியாய், உயிர்க்குயி ராய்நின்ற அமலன்

---

பேதகம் — வேறுபாடு போதம் — ஞானம்

முருகப் பெருமான் ஞானமே வடிவானவர். அவர் மிக மிகப் பெரியவர்; அவருடைய பெருமை அவருக்கே தெரியாது என்பது சிங்கன் கூற்று. இவ்விதமாகவே மாணிக்கவாசகரும், ''தன் பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலோ'' என்று கூறியருளினர். சிங்கன் கூறிய அறிவுரையைத் தன்மதத்தினுல் ஏற்க மறுத்த சூரன் போர்க்களத்தில் பெருமானை நேருக்கு நேராகக்கண்டு,

''காற்றில் தள்ளுண்டு நெருப்பினிற் சூடுண்டு கங்கை
யாற்றில் தாக்குண்டு சரவணம் புக்கலை யுண்டு
வேற்றுப் பேர்முலை யுண்டழு தேவிளை யர்டும்
நேற்றைப் பாலன்...'' என்று பரம்பொருளைப் பரிகாசம் பண்ணினுன், ''நீயும் போர்புரிய வந்து விட்டாயா?'' என்று கர்ச்சித்தான். இறுதியில் எம்பெருமான் தமது திருப் பெருவடிவத்தைக்காட்ட,

''கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தேன் அந்நாள் பரிசிவை யுணர்ந்திலேன்யான்
மால்அயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்திஇம் மூர்த்தி யன்றோ''

என்று உணர்ந்தான். அந்த உணர்ச்சியை அவனுக்குக் கொடுத்ததே எம்பெருமானுக்கு முதற்பெருமை. பாழ்வாழ் வெனும் இப்படு மாயையிலே வீழ்ந்து கிடந்த சூரனுக்கு, 'நீயும் முன்னேறலாம்; உனக்கும் கதியுண்டு'' என்று காட்டினுரே, அதுவே எம்பெருமான் பெருமை. அதனிலும் மேலான பெருமை மயிலும் சேவலுமாக உருவெடுத்து மீட்டும் போருக்கெழுந்த சூரபன்மனை ஊர்தியும் கொடியுமாகக் கொண்டமை. எம்பெருமானை உதாசீனம் பண்ணி எள்ளி நகையாடிய சூரனுக்கு அவரைச் சுமக்கின்ற பெருமையும், அவருக்குக் கொடியாக இருக்கின்ற பெருமையும் கிடைக்குமானுல், பழிபாவங்களுக்குப் பயந்து, தருமவழியில் நின்று அவர் பெருமையுணர்ந்து அடைக்கலம் புகுபவர்கள் அவர் அருள் வெள்ளத்தில் திளைத்து, அவர் அருட் குழந்தைகளாகி அவர்மடியில் தவழ மாட்டார்களா?

''தீயவை புரிந்தா ரேனும் குமரவேள் திருமுன் உற்ருல்
தூயவர் ஆகி மேலைத் தொல்கதி அடைவ ரென்கை

ஆயவும் வேண்டுங் கொல்லோ அடுசமர் முன்னுட் செய்த
மாயையின் மகனு மன்றே வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்',

## அப்பன் திருவிளையாடல்கள்

முருகப்பெருமான் தீராத விளையாட்டுப்பிள்ளை. அவருடைய திருவவதாரமே விளையாட்டு மயமானது. கங்கையில் தோன்றிக் காங்கேயன், கங்கோற்பவன் என்ற பெயர்களைத் தாங்கினுர். சரவணப் பொய்கையில் ஆறுகுழந்தைகளாகக் காட்சி கொடுத்துச் சரவணபவன், சரவணப்பெருமாள் போன்ற திருநாமங்களைப் பெற்றுர். கார்த்திகை நாளில் தோன்றிக் கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டுக் கார்த்திகேயன் என்னும் பெயருற்றுர். உமையம்மையார் தழுவக் கந்தசுவாமி ஆறுமுகசுவாமியானுர். கைலையங் கிரியில் குழந்தைக் கோலத்தில் அகில உலகையும் பலபல விதமாக மாற்றியும் திரித்தும் பலபல விளையாடல்கள் புரிந்தார்.

குலகிரி அனைத்தும் ஓர்பாற் கூட்டிடும்; அவற்றைப் பின்னர்த்
தலைதடு மாற்ற மாகத் தரையிடை நிறுவும்; எல்லா
அலைகடல் தனையும் ஒன்று ஆக்குறும்; ஆழி வெற்பைப்
பிலனுற அழுத்தும்; கங்கைப் பெருநதி அடைக்கும் மன்னே.

இருள்கெழு பிலத்துள் வைக்கும் எண்தொகைப் பணியும் பற்றிப்
பொருள்கெழு மேரு ஆதி அடுக்கலிற் பூட்டி வீக்கி
அருள்கெழு குமர வள்ளல் ஆவிகட் கூறின் றுக
உருள்கெழு சிறுதே ராக்கொண் டொல்லென உருட்டிச் செல்லும்

ஆசையங் கரிகள் தம்மை அங்கைகொண் டொன்றே டொன்று
பூசல்செய் விக்கும்; வானில் போந்திடும் கங்கை நீரால்
காய்சின வடவை மாற்றும்; கவின்சிறைக் கலுழ ஞேடு
வாசுகி தன்னைப் பற்றி மாறிகல் விளக்கும் அன்றே.

---

பிலம் - நாகலோகம்; பணி – பாம்பு; அடுக்கல் – மலை
வீக்கி - கட்டி; ஆசையங்கரிகள் - திக்குயானைகள்
வடவை - ஊழிக்காலப் பெருநெருப்பு

வடுத்தவிர் விசும்பிற் செல்லும் வார்சிலே இரண்டும் பற்றி
உடுத்திரள் பலகோள் இன்ன உன்ரடையாக் கொண்டு
வானேர்
முடித்தலே உரம்தோள் கண்டம் முகம்படக் குறியா எய்தே
அடற்றனு விஞ்சை காட்டும் ஆறிரு தடந்தோள் அண்ணல்.

தான்வேதனென்று இறுமாப்புக் கொண்ட பிரமனிடம் வேதத்தின் மூலமந்திரமான பிரணவப் பொருளைக் கேட்ட போது தெரியாது பிரமன் விழிக்க, அவனுடைய சிரம் நான்கும் மோதிப்புடைத்துப் பிணித்துச் சிறையிட்டார். சிவபிரானுக்குப் பிரணவப் பொருளைக் கூறிச் சிவகுமாரர் சிவகுருநாதரானுர். தம்மைச் சோதிக்கவந்த இந்திரனைக் குலத்தோர்டும் போரில் தொலேத்துப் பொடியாக்கிப் பின் அனைவரையும் உயிர்பெற்றெழுப்பும் திருவிளையாடலேப்புரிய அவர்கள் எம்பெருமானே,

''கந்தநம ஐந்துமுகர் தந்தமுரு கேசநம கங்கைஉமைதன்
மைந்தநம பன்னிரு புயத்தநம நீபமலர் மாலேபுனேயும்
தந்தைநம ஆறுமுக ஆதிநம சோதிநம தற்பரமதாம்
எந்தைநம என்றும்இளே யோய்நம குமாரநம என்று
தொழுதார்.

சூரன் முதலானேரை நினைத்தகணத்திலேயே சாம்பராக்க வல்லவராயிருந்தும் ஆறுநாளாகக் கடும் போர்புரிந்தார்.

''பொருசமர் விளேப்பான் போலப் பொருக்கெனப் போந்து
சூரன்
இருவிழி தன்னிற் காண்பான் எளிதுதன் வடிவங் காட்டி
அருளது புரிந்தான் என்னில் ஆதியங் கடவுள் மாயத்
திருவிளே யாடல் யார்க்கும் தெரிகில போலும் அன்றே.

சூரபன்மனேபோர்க்களத்தில் அவரின் விசுவரூபத்தைக் கண்டு

---

அடற்றனு – அடல் + தனு = வலிய வில்: உடுத்திரள் - விண்மீன்
தொகுதி

நீபமலர்மாலே - கடப்பம் பூ மாலே

"அண்ணலார் குமரன் மேனி அடிமுதல் முடியின் காறும்
எண்ணிலா ஊழி காலம் எத்திறம் நோக்கி னாலும்
கண்ணினு லடங்கா துன்னிற் கருத்தினு லடங்கா தென்பால்
நண்ணினன் அமருக் கென்கை அருளென நாட்டலாமே

என்று கூறினன். தெய்வயானையம்மையைத் திருமணஞ் செய்யும் பாவனையில் ஆட்கொண்டார்.

குருநாதராகிய முருகப்பெருமான் ஆன்மாக்களை ஆட்கொள்ளும் முறையைச் சைவநூல்கள் இரண்டுவகைப் படுத்திக் கூறும். ஒன்று பூனையானது குட்டி தன்னைத் தேடா திருந்தாலும் தான் குட்டியை வலிந்து கூட்டிச் செல்லுவது போன்ற மார்ச்சார சம்பந்தம். மற்றது குரங்குக்குட்டி தன் தாயைத் தானாக வலிந்து அணைத்துக் கொள்ளுவது போன்ற வானர சம்பந்தம். தெய்வநாயகியார் முருகக்கடவுளை அடையவேண்டுமென்று நெடுங்காலமாகவே நோன்பிருந்தவர். அவரைவளர்த்த இந்திரனும் இந்திராணியும் முருகப்பெருமானைப் பன்முறை வேண்டித் தங்களை ஆட்கொள்ளுமாறு இரந்து கேட்டனர். அதனால் முருகப்பெருமான் தெய்வயானையை வானர சம்பந்தமாக ஆட்கொண்டார். வள்ளிநாயகியாரை வேட்டுவக் குமரன் வடிவத்தில், வேங்கைமர உருவில், வயதுமுதிர்ந்த சந்நியாசிக் கோலத்தில் வலிந்து ஆட்கொண்டமுறை மார்ச்சார சம்பந்தமெனலாம். அன்றியும் முருகக்கடவுள் வள்ளிநாயகிமேற் காதல் கொண்டு உருகியுழன்றாறென்பதெல்லாம் வானத்திலே நிலையாய் அசைவின்றி நிற்கும் சந்திரனது விம்பம், கலங்குகின்ற தண்ணீரிலே பார்க்கக் கலங்கித் தோன்றுவதைப்போன்ற

---

அண்ணலார் குமரன் — பெருமையினிற் சிறந்த முருகப்பெருமான்; என்பால் நண்ணினன் அமருக்கு என்கை அருள் என நாட்டலாம் — எம்பெருமான் என்னுடன் போர் புரிய வந்த செயல் என்னை ஆட்கொள்ளக் கொண்ட அருட்செயலென்றே குறிக்கவேண்டும்.

காட்சியேயாம் என்பது,

"உலைப்படு மெழுகு தென்ன உருகியே ஒருத்தி காதல்
வலைப்படு கின்றான் போல மயங்கியே இரங்கா நின்றான்
கலைப்படு மதியப் புத்தேள் கலங்கலம் புனலில் தோன்றி
அலைப்படும் தன்மைத் தன்றே அறுமுகன் ஆடல் எல்லாம்."

என்ற கச்சியப்பசிவாசாரியசுவாமிகள் கூற்றால் அறியப்படும்.

கல்வித்தெய்வமாசிய கலைமகளுக்கொப்பான புலமை படைத்த தமிழ் மூதாட்டியான ஔவையாரின் கல்விச் செருக்கைப் போக்கியருள எம்பெருமான் திருவுளங்கொண்டார். அவர் சென்ற வழியி னொருபால் எருமைமேய்க்கும் சிறுவனாய் மரத்தில் நின்று, "பாட்டி! சுட்டபழம் வேண்டுமா, சுடாதபழம் வேண்டுமா?" என்று கேட்டுப் பரிகாசம் செய்தார். அப்போது,

"கருங்காலிக் கட்டைக்கு நாணாக் கோடாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும் — மருங்காகக்
காட்டெருமை மேய்க்கின்ற காளைக்கு யாம்தோற்றோம்
நாட்டரசன் கோட்டை நகர்க்கு" என்று கூறி

ஔவையார் வருந்த எம்பெருமான் தமது திருவருள் வடிவத்தைக் காட்டி அருள்செய்தார்.

கடவுளரிற் சிவனையும், அரசரிற் பாண்டியனையுமேயன்றிப்பிறரெவரையும் பாடேனென்று வீரம் பேசிய பொய்யாமொழிப்புலவர் முருகப் பெருமானைப் பாடமறுத்தார், "கோழியைப் பாடிய வாயாற் குஞ்சைப்பாடேன்" என்று பிடிவாதஞ் செய்தார். அவர் ஒருநாள் ஓர் ஊரிலிருந்து இன்னோர் ஊருக்குக் காட்டுவழியாகப் போய்க்கொண்டிருந்தார். கொடியவெப்பம் மிகுந்த வேளையில் கற்களும் முட்களும் நிறைந்தவழியில் நடந்து சோர்வுற்றுத் தளர்ந்த புலவரிடம் வேட்டுவக்குமரனாகி எம்பெருமான் சென்றார்.

---

கொல்லனது உலைக்களத்திட்ட மெழுகு எவ்வாறு நீராய் உருகுமோ அவ்வாறு எம்பெருமானும் மனங்கசிந்துருகி வள்ளியம்மையின் காதல் வலையிற் சிக்குண்டவனைப்போல கலங்கிவருந்தி நின்றான், வானத்திலே அசைதலின்றி நிற்கும் கலைகள் பொருந்திய சந்திரதேவனது பிம்பத்தை கலங்கல் நீரிற் காணும்போது சந்திரன் அலைக்கப்படுபவன் போலத் தோற்றுவது போன்றதே அறுமுகப்பெருமானது திருவிளையாடல்களாம்.

கனியும் தேனும் அருந்தக் கொடுத்து உபசரித்தார். அதனல் களைப்புநீங்கி மனங்குளிர்ந்த புலவர் அந்த வேட்டுவனுடைய பெயர் முதலியவற்றை விசாரித்தார். அவன் தனது பெயர் முட்டையென்ருன். புலவருடைய வாக்கிலிருந்து நன்றியுணர்வு கலந்த பின்வரும் பாடல் உதயமானது.

''பொன்போலும் கள்ளிப் பொறிபறக்கும் கானலிலே
என்பேதை செல்லற் கிசைந்தனளே — மின்போலும்
மானவேல் முட்டைக்கு மாருய தெவ்வர்போம்
கானவேல் முட்டைக்கும் காடு.''

தனதுமகள் அவளுக்கு விரும்பிய காதலனேடு களவாகச் சென்றதையறிந்த தாய் கூற்ருக அகப்பொருள் தழுவி வந்தது இப்பாட்டு. ''கள்ளியானது வெப்பமிகுதியால் எரிந்து பொன்னிறப் பொறிகளாகப் பறக்கும் வெப்பக் கொடுமையையுடையது அந்தக்காடு. வேற்படையேந்தியவனும் மானமுடையவனுமாகிய முட்டை என்னும் வீரனுக்குப் பகைவராயினரே அக்கொடிய காட்டிற்கு ஏகுவர். காட்டு வேலமரத்தின் முட்கள் தைக்கும் கொடியவழியிலே எனது பெண் எவ்வாறு சென்ருள்'' என்பது இதன் பொருள். அது கேட்ட வேட்டுவக்குமரன், ''கள்ளி பொறியாகப் பறக்குங் கானத்தில் வேலம்முள் சாம்பராய் விடுமே; அஃது எப்படிக் காலில்தைக்கும்? புலவரே குஞ்சைப்பாடேன் என்ற வாயால் முட்டையைப் பாடினீரே'' என்று கைதட்டி நகைத்தார். பொய்யாமொழியார் வெட்கமும் துக்கமுமுற்றுத் துணுக்கமெய்திய வேளையிலே அள்ளிலைவேல் முருகன் புள்ளிமயில் மீதிவர்ந்து தோன்றி அருள்புரிந்தனர்.

இவ்வாறு முருகப்பெருமானது திருவிளையாடல்கள் எண்ணில்லாதன. அவையொவ்வொன்றுமே ஒவ்வொரு நூலாயமைந்துவிடும். எம்பெருமான் அன்பர்க்கு அருள் செய்து அவரை ஆட்கொள்ளும் திறம் ஒரு விளையாட்டு. அந்த விளையாட்டை அறிந்தவர்கள் உய்யும் வகையில் உய்வார்கள். அப்பெருமானுடைய விளையாட்டு 'கறந்தபாலுன்னலொடு நெய்கலந்தாற் போன்று இன்பமூட்டவல்லது; பிறவிப்பயனைக் கொடுக்கவல்லது. அந்த விளையாட்டை நுகரத் தொடங்கினல் இந்த மாயப்பிரபஞ்ச விளையாட்டுக்களெல்லாம் உமிக்குத்திக் கை சலிக்கும் கதையென்பது புலப்படும்.

பெரும்பைம் புனத்ினுள் சிற்றேனல் காக்கின்ற பேதை
கொங்கை
விரும்புங் குமரனை மெய்யன்பி னல்மெல்ல மெல்லவுள்ள
அரும்புந் தனிப்பர மானந்தந் தித்தித் தறிந்தஅன்றே
கரும்புந் துவர்த்துச்செந் தேனும் புளித்தறக் கைத்ததுவே.

## பெருமானை வழிபட்டுப் பெருவாழ்வு பெறுவோம்

எம்பெருமான் இன்பமே வடிவானவர். அன்புமயமானவர். மெய்யர்க்கு மெய்யன்; பொய்யர்க்குப் பொய்யன். அவரை நாம் பூரணமாக நம்பி, அவரிடம் நம்மை ஒப்புக் கொடுப்போமாயின் எங்கள் துன்பங்கள் அனைத்தும் தொலையும். அவரை நாம் நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் எப்போதும் தொழுவோம்.

உன்னை யொழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ்வே.

எந்தா யுமெனக் கருள்தந் தையும்நீ
சிந்தா குலம்ஆ னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே உமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே.

காக்கக் கடவியநீ காவா திருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா — பூக்கும்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடங்காண் இரங்காய் இனி.

பேரா தரிக்கும் அடியவர்தம்
பிறப்பை யொழித்துப் பெருவாழ்வும்
பேறும் கொடுக்க வரும்பிள்ளைப்
பெருமா னென்னும் பேராளா

சேரா நிருதர் குலகலகா
சேவற் கொடியாய் திருச்செந்தூர்த்
தேவா தேவர் சிறைமீட்ட
செல்வா என்றுன் திருமுகத்தைப்

பாரா மகிழ்ந்து முலைத்தாயர்
பரவிப் புகழ்ந்து விருப்புடன்அப்
பாவா வாவென் றுனைப்போற்றிப்
பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால்

வாரா திருக்க வழக்குண்டோ
வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

குன்றம் எறிந்தாய் குறைகடலிற் சூர்தடிந்தாய்
புன்தலைய பூதப் பொருபடையாய் — என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாய்என் உள்ளத் துறை.

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற இராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.

புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி ஒழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையும் அடிய னாக்கி இருவினை நீக்கி ஆண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங் கயங்கள் போற்றி.

நெடும்பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ;
ஆல்கெழு கடவுட் புதல்வ; மால்வரை
மலைமகள் மகனே; மாற்றோர் கூற்றே;
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ;
இழையணி சிறப்பிற் பழையோள் குழவி;
வானோர் வணங்குவில் தானைத் தலைவ;
மாலை மார்ப; நூலறி புலவ;
செருவில் ஒருவ; பொருவிறல் மள்ள;
அந்தணர் வெறுக்கை; அறிந்தோர் சொல்மலை;
மங்கையர் கணவ; மைந்தர் ஏறே;

வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ!
குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ;
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே;
அரும்பெறல் மரபில் பெரும்பெயர் முருக;
நசையுநர்க்கு ஆர்த்தும் இசைபே ராள;

---

[சிவபெருமானுடைய ஆறுதிருமுகங்களிலுமுள்ள நெற்றிக்கண்களில் நின்றும் ஆறுபொறிகள் தோன்றின. அவற்றை வாயுதேவனும் அக்கினிதேவனும் எடுத்துச்சென்று கங்கையில் விட்டனர். அவையாறு பொறிகளும் ஆறு குழந்தைகளாய்ச் சரவணதடாகத்தையடைந்து தாமரைமலர்களில் அமர்தலும் கார்த்திகைப் பெண்கள் அறுவர் அக்குழந்தைகளை அணைத்துப் பாலூட்டினர்.]

நெடிய பெரிய இமயத்தில் சரவணப் பொய்கையில் கார்த்திகைப் பெண்கள் அறுவரும் எடுக்க அக்கினி தன் கையிலே தாங்கிய ஆறு உருவமைந்த செல்வனே! கல்லால விருட்சத்தின் கீழிருந்தருளிய சிவனார் குமாரனே! பெரிய இமயமலையரசனது புத்திரியின் மைந்தனே! பகைவருக்கு கூற்றம் போன்றவனே! வெற்றியைத் தரும் போரைச் செய்யவல்ல துர்க்கையின் புதல்வனே! அணிகலன்களை அணிந்த சிறப்புடைய காளிதேவியின் குமாரனே! வில்லையேந்திய வானவர் படைக்குத்தலைவனே! கடம்பமலர்மாலையணிந்த மார்பனே! நூல்களை யுணர்ந்த அறிஞனே! போரில் ஒப்பற்றவனே! பொருகின்ற வெற்றியுடைய வீரனே! அந்தணருக்குஅரிய செல்வமாயிருப்பவனே! அறிஞரின் புகழ்ச்சொற்களெல்லாம் ஒன்றாகக் குவிந்தமலையே! வள்ளியம்மை தெய்வநாயகி என்போரின் கணவனே! வீரருள் சிங்கமே! வேலைத் தாங்கிய திருக்கரமுடைய அருட்செல்வனே! கிரௌஞ்சமலையைத் தொலைத்த குன்றாத வெற்றிபடைத்த, வானளாவிய மலைகளைக்கொண்ட குறிஞ்சி நிலத்தலைவனே! பலரும் புகழ்கின்ற நன்மொழிப் புலவர்களுட் சிறந்தவனே! பெறுதற்கரிய முத்திப்பேற்றை அருளும் முருகனே! முத்தியை விரும்பினோர்க்குக் கொடுத்தருளும் பெரும் புகழா

அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூட் சேஎய்;
மண்டமர் கடந்தநின் வென்றடு அகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேஎள்;
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்!
சூர்மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி;
போர்மிகு பொருந; குரிசில்..............

என்று எம்பெருமான் புகழை – திருநாமங்களைக் கூறித் துதித்து இப்பிறவியைப் பெற்றதனாலாகிய பயனைப் பெறுவோம்.

எம்பெருமான் தம்மை வணங்கவே தலையைப் படைத்தார். வாழ்த்தவாயும் நினைக்க மடநெஞ்சும் தந்தருளினார்.

"வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத் தெம்பெருமான்
அணங்கொ டணிதில்லை யம்பலத்தே யாடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.

அஞ்சுமுகந் தோன்றில் ஆறுமுகந்தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும் — நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகா என் றோதுவார் முன்.

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே — ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

---

ளனே! பிறரால் வருந்துவோர்க்கு அருள்புரியும் பொன்னகை யணிந்த சேயே! மிக்க போரில் வெற்றி கொண்டமார்பினாலே பரிசில் வேண்டுவோரைத் தாங்கியருளும் செவ்வேளே! கற்றுணர்ந்த பெரியோர் துதிக்கும் பெரும் புகழ் பெற்ற கடவுளே! சூரனைக் குலத்தோடு தொலைத்த வலியோனே! மதவலி என்ற பெயருடையானே! போரில் மிக்க வீரனே! தலைவனே!

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச்
செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போதும் மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே.

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காஎனும் நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே.

நாடும் நகரும் திரிந்துசென்று நன்னெறி நாடி நயந்தவரை
மூடி முதுபிணத் திட்டமாடே முன்னிய பேய்க்கணம்
சூழச்சூழக்
காடும் கடலும் மலையும்மண்ணும் விண்ணும் சுழல
அனல்கையேந்தி
ஆடும் அரவப் புயங்கனெங்கள் அப்ப னிடந்திரு ஆலங்காடே.

புந்தி கலங்கி மதிமயங்கி இறந்தவ ரைப்புறங் காட்டிலிட்டுச்
சந்தியில்வைத்துக்கடமைசெய்து தக்கவரிட்டசெந் தீவிளக்கா
முந்தி அமரர் முழவினோசை திசைகது வச்சிலம் பார்க்கஆர்க்க
அந்தியின் மாநடம் ஆடுமெங்கள் அப்பன் இடந்திரு
ஆலங்காடே.

பண்ணுக ஊரைநன்கு பார்த்தருளி வாழ்விக்கத்
தண்ணார் விசவத் தனையமரும் — கண்ணன
அப்பன் முருகன் அடியேம் வினையொழிக்க
இப்பிறவி தந்தான் இசைந்து.

இசைந்த நலமுறினும் என்கர்மத் தாலே
அசைந்து மிகவருந்தி னலும் — கசிந்துபுகழ்
சாற்ற விசவத் தனையெம் முருகப்பா
ஆற்ற வருளுமப் பா

பாவும் உரையும் பயின்றும் உனைத்துதிக்க
நாவும் பிறவுறுப்பும் நாணுமிந்தப் — பாவமெலாம்
ஓடித் தொலைய உயர்விச வத்தனையாய்
தாடலையில் வைத்தருளத் தா.

கதியென் றடைந்தாரைக் காலன் அணுகும்
விதிவரினும் மாற்றி மிகவும் இதமான
தாட்டுணைகள் காட்டி விசவத் தனைமுருகன்
ஆட்கொண் டருள்செய்கு வான்.

வானவர்கோன் மாலயனுர் வாழ்வினை வேண்டுவமோ
ஏனற் புனங்காத் திடும்வள்ளி — மானை
மருட்டிப் பிடித்தவிச வத்தனையி லீசன்
அருட்பதமே யாம்வேண்டு வம்.

வம்மின் அருள்விச வத்தனையிற் கந்தையர்
தம்மைத் துதித்துத் ததிங்கிணத்தொம் — தொம்மென்று
ஆடுவோம் அன்புடையீர் அப்பன் புகழ்பாடிக்
கூடி மகிழ்வோம் குழைந்து.

என்று போற்றி, ''எம்பெருமானே!
யாம் இரப்பவை,
பொன்னும் பொருளும் போகமு மல்ல
நின்பால்
அன்பும் அருளும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதாரோயே''
என்று வேண்டுவோம்.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.
வேலும்மயிலும்துணை.

சிவமயம்

# விசவத்தனை முருகப்பெருமான் பதிகம்

## காப்பு

சீரார் விசவத் தனைமுருகன் சேவடியில்
ஆராத அன்பால் அருட்பதிகம் — நேராகச்
சூட்டுதற்குத் தோன்றாத் துணையாங் கணேசரது
தாட்டுணைப் போது சரண்

மாசிலா மெய்யன்பர் மனமெனும் பொய்கையில்
மலர்ந்திடும் அடிக்கமலமும்
மன்னுமருள் மழைபொழியும் ஈராறு விழிகளாம்
வான்கருணை முகிலுமரிய
நேசரா யினரிதய வெற்புதித் திடுமிரவி
நிகராறு திருமுகமுமெந்
நேரமும் மாறாத நிலவுபொழி முறுவலும்
நீடுமழ கொழுகுமுடியும்
பேசலா காதசீர் மேவுபன் னிருபுயமும்
பிரியமிகும் அன்னைமார்கள்
பெட்புடன் தழுவுமிரு புறமுநான் காணவருள்
பெருகுநாள் எந்தநாளோ
தேசுலா வுங்கதிரை மலைமீதும் உறைகின்ற
தெய்வமே யுனைநம்பினேன்
செல்வவிச வத்தனைப் பதியிலமர் ஐயனே
செய்யனே முருகையனே. (1)

---

தாட்டுணைப்போது — தாள் + துணை + போது = இரண்டு திருவடிகளாகிய தாமரைமலர், இரவி — சூரியன், பேசலாகாதசீர் - சொல்லில் அடங்காத சிறப்பு, பெட்புடன் — மிக்கஅன்புடன் தேசு — தெய்வஒளி

வாடாத மலரேயம் மலரிலுறு வாசமே
மதிக்கமுடி யாதமணியே
மாற்றிலாப் பொன்னேயென் அன்பேயென் ஆனந்த
வடிவேயென் அறிவிலொளிரும்
கோடாத நீதியே குறையாத செல்வமே
கொழுகொம்பு போலநின்று
கொடியனேன் பிரபஞ்ச வாழ்வெனுங் காற்றிஞற்
குறையிலழி யாதவகையில்
வீடாத வாழ்வுதந் தனேயேனு முன்னருள்
விழிக்கிலக் காகிவாழும்
மெய்வாழ்வு தந்துனது பதநிழ லிருத்தவருள்
மேவுநாள் எந்தநாளோ
தேடாத இன்பமே செல்வமே எங்கள்குல
தெய்வமே யுனேநம்பினேன்
செல்வவிச வத்தனேப் பதியிலமர் ஐயனே
செய்யனே முருகையனே. (2)

மனதைநீ யுறையுமிட மாக்கியென் விழிகளுன்
வடிவையே நோக்கவைத்து
வாயுனேப் பாடவைத் தெனதுசெவி நின்புகழ்
மாண்பினிது கேட்கவைத்து
நினதுபணி செய்யவென் கைகள்வைத் தெனதுகால்
நீடுமுன் வீதிசூழும்
நெறியையும் வைத்துயான் கூடுதற் காயுனது
நேசரின் கூட்டம்வைத்து
தனதனத் தானதந் தனதான தனவென்று
சந்ததமும் மன்றுளாடும்
தாட்டுணேகள் தந்தென்னே யாட்கொள்ளு தற்குளம்
சாருநாள் எந்தநாளோ
தினகரன் நுழையாத பொழிலும் புலங்களும்
திருமருவு குடிமனேகளும்
திகழும்விச வத்தனேப் பதியிலமர் ஐயனே
செய்யனே முருகையனே. (3)

---

கோடாத நீதி - ஒரஞ்சாராத நடுவுநிலேமை, வீடாத வாழ்வு — கெட்டுச்சீரழியாத வாழ்வு, தேடாத இன்பம் - முயன்று தேடினு லும் கிடையாத இன்பம் (அவனருளாலேயே அடையப்படுமின்பம்) வீதி சூழும் நெறி - கோயிலே வலம்வரும் முறை, தினகரன் — சூரியன்

இந்துதவழ் வேணியரின் மைந்தருமை யாள்புதல்வர்
யானைமுக விக்கினேசர்
இகல்வயிர வர்வீர பத்திரக் கடவுளிவர்
இதமருவும் அரியதம்பி
நந்துகைக் கொண்டதிரு மால்மருகர் பிரமற்கு
நல்லறி வுறுத்துமத்தான்
நாடுமயி ராவதம் வளர்தெய்வ யானையொடு
நம்பிவளர் வள்ளியம்மை
தந்திருக் கணவரென் றென்றுறவு முறைகள்பல
சாற்றித் துதிக்குமன்பர்
தாம்விரும் பியவாழ்வி னெடுவீடு பேற்றினைத்
தந்தருளும் மெய்க்கடவுளே
சிந்தைகுளி ரும்வகையில் மயிலேறி வந்துனது
தெரிசனந் தந்தருளுவாய்
செல்வவிச வத்தனைப் பதியிலமர் ஐயனே
செய்யனே முருகையனே. (4)

வெற்றிவேல் சக்திவேல் வீரவேல் தாரைவேல்
வினையிரு ளகற்றுகதிர்வேல்
வேதனைகள் விளைவிக்கும் ஆணவ மலத்தருவை
வேருடன் அகழ்ந்திடும்வேல்
கொற்றவேல் தாரகனை யுருவுவேல் சூரனிரு
கூறுபட் டுய்யவிடுவேல்
கொடுமைசெய் திடவரும் பகையெலாஞ் சுட்டுக்
குலத்தொடு பொசுக்கிடும்வேல்
கற்றைவேல் கந்தவேல் ஆறுமுக வேல்மனக்
கண்திறந் திடுஞானவேல்
காலவேல் கதிர்காம வேலரே நம்பினேன்
கழலிணைக ளேகதியெனச்
செற்றமிக உடையனென் றுலுமவை போக்கியுன்
திருவடிக் காளாக்குவாய்
செல்வவிச வத்தனைப் பதியிலமர் ஐயனே
செய்யனே முருகையனே, (5)

---

இந்துதவழ் வேணியர் - சந்திரனைத்தாங்கும் சடாமுடியை யுடைய சிவபெருமான், நந்து - பாஞ்சசன்னியம் என்னும் சங்கு
செற்றம் - கோபம் முதலான குற்றம்

நாடொறுங் காலமும் வேகமாய்ப் போகிறது
நரைபிணி தளர்ச்சிமுதுமை
நலிந்திடப் பார்வையும் கேள்வியு மொடுங்கமெய்
நடுங்கியுயிர் பிரியுமுன்புன்
தாடலையில் வைத்திடப் பெறுமருள் வாய்க்குமோ
தப்புமோ என்றுதினமும்
சஞ்சலித் துருகியழி கின்றனன் களவுபொய்
தணியாத கோபமோகம்
நீடுங் குரோதமாம் பலவகைக் குற்றமும்
நிறைதீய னெனினுமையா
நீயேயென் அன்னைமெய்த் தந்தைகுரு வாம்சகல
நிலையுமா மென்றுணர்ந்து
தேடிவந் தேனினிய திருவடித் தாமரைகள்
சேவிக்க அருள்புரிகுவாய்
செல்வவிச வத்தனைப் பதியிலமர் ஐயனே
செய்யனே முருகையனே. (6)

உண்மையன் போடுவழி படுமவர் தமக்குற்ற
உடற்பிணி யுயிர்ப்பிணியெலாம்
ஒழித்தின்ப மாருத சுகானந்த வாழ்வருளும்
உயர்வயித் தியநாதனே
வெண்ணிலவி லுறுதண்மை வெயிலிலுறு வெம்மையாய்
வியாபித்த சிற்சக்தியே
வேதாக மங்களும் ஞானநூல் யாவையும்
விரித்துரைக் கின்றபொருளே
எண்ணாத நினைவெலாம் எண்ணிமிக நொந்துளேன்
இதுபொழு திளைத்தேனையா
இன்னுமிங் கேயிருந் தவமாக அழியாமல்
என்னையுன் பாலழைப்பாய்
கண்ணான குரவனே கதிர்காம நாதனே
கருணாக ரக்கடவுளே
கனகவிச வத்தனைப் பதியமரு மீராறு
கையனே முருகையனே. (7)

---

உன் தாள் தலையில் வைத்திட - உனது திருவடிகளை என் சிரத்தில் தாங்க (அத்துவித முத்திடைய)
சஞ்சலித்து - கவலையுற்று

ஐந்திணை யகப்பொரு ளிலக்கணங் களவுகற்
பாகுமிரு கைகோளினுல்
ஆனதக் களவுநெறி சிற்றின்ப வாழ்வினையும்
அழிவிலா முத்தியினையும்
தந்துதவு மெனவள்ளி நாயகியில் மிகுவிரக
தாபமது கொண்டுவாடித்
தணியாத காதலொடு களவுவழி நின்றசெயல்
சாமிநின் விளையாடலே
இந்திரன் மகள்தெய்வ யானையை மணந்ததிறம்
ஏவருமறி யும்வகையினில்
இயலுவது கற்புமண மெனநீ உணர்த்தவிவை
இரண்டையுங் கொண்டதாலே
செந்தமிழ் ஒழுக்கநெறி நிலைநாட்டி டுந்தமிழ்த்
தெய்வமென் பதுகாட்டினுய்
செல்வவிச வத்தனைப் பதியமரும் ஐயனே
செய்யனே முருகையனே. (8)

மாயைபெற் றிடுமக்கள் சூரன்முதல் மூவரும்
வானவரை மற்றுளோரை
வாதைப் படுத்தவவர் ஓலமிட் டலறிமனம்
மாழ்கிடத் தேவரீரத்
தீயரை நினைத்தவொர் கணத்தினி லழித்திடுந்
திறலிருந் தாலுமதனைச்
செய்யாது விளையாடல் செய்வதற் காகவே
செருக்களம் வகுத்துநின்று
ஓயாத போர்செயும் பாவனையி லாட்கொண்
டுகந்திட்ட உண்மைதன்னை
ஓர்ந்திடில் மாயைகா ரியமாகும் மும்மலம்
ஒழித்தருளி உலகமீதில்
சேயனே தருமத்தை நிலைபெறச் செய்யுமெய்த்
தெய்வமென் பதுகாட்டினுய்
செல்வவிச வத்தனைப் பதியிலமர் ஐயனே
செய்யனே முருகையனே. (9)

அன்பினைந் திணையெனும் அகப்பொரு ளிலக்கணம்
அதற்குண்மை யுரையாதென
அன்றுசங் கப்புலவர் ஏழேழு பேர்களும்
அவதியுறு போதிலன்னுர்
முன்பொரு குழந்தையாய் மோனியாய் விழிநீர்
முகிழ்க்கின்ற அன்புநிலையே
முடிந்தமெய் யுரையெனக் காட்டிஞய் முன்னுளில்
முனிவரொரு நால்வருக்குத்
தென்திசை யமர்ந்துகல் லாலமர நிழலிலே
சீர்ஞான பாதமதனைச்
சிவபிரான் எத்திற முணர்த்திஞர் நீயுமத்
திறத்தினில் உணர்த்தலாலே
தென்பா லுகந்திடும் பரமசிவன் நீயெனத்
தெளிந்திடச் செய்தாயையா
செல்வவிச வத்தனைப் பதியமரு மையனே
செய்யனே முருகையனே. (10)

---

இறையனுர் அகப்பொருள் என்னும் இலக்கண நூலுக்குக் கடைச்சங்கப் புலவர்கள் நாற்பத்தொன்பது பேரும் உரை வகுத்துத் தாந்தாம் கண்ட உரையே மெய்யுரை என்று வாது செய்தனர். அதனுல் உண்மையுரையிதுவென நிச்சயிக்கமுடியாது கவலையுற்ற புலவர்கள் மத்தியில் முருகப்பெருமான் ஒரு குழந்தைவடிவில் தோன்றியருளினர். அவரைச் சங்கப் பலகையில் இருத்திப் புலவர்கள் தாம் கண்ட உரையை ஒவ்வொருவராகக்கூறினர். அப்போது எம்பெருமான் மெய்யுரை கேட்டபோது கண்ணீர் சொரிந்து மெய்ப்புளகங் காட்டியருளினர். நக்கீரனுருடைய உரையைக் கேட்ட போதே இடையருது கண்ணீர் சொரிந்தமையினுல் புலவர்கள் மெய்யுரை அதுவெனத் துணிந்தனர். இவ்வாறு முருகப்பெருமான்மெய்யுரையைச் சொல்லால் உணர்த்தாது தமது மோனநிலையால் உணர்த்தியருளியமையைப் போலவே சிவபெருமானும் முன்னுளில் ஞானபாதத்தை நான்குமுனிவருக்கு மோனநிலையில் நின்று உணர்த்தியருளினர். முருகப்பெருமானும் சிவபெருமானும் ஒருவரே என்பது இதனுலும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

உ

சிவமயம்

# விசவத்தனை முருகப்பெருமான் ஊஞ்சல்

## காப்பு

வெற்றி வடிவேல் விசவத் தனைமுருகன்
நற்றமி ழூஞ்சல் நவிலுதற்குப் — பொற்கமல
பாதந்தந் திந்நேரம் பார்த்தருள்செய் வாய்விந்து
நாதவடி வைங்கரனே நன்கு.

ஓவாது பலபிறவி யெடுத்தும் மாய்ந்தும்
ஊசலா டுவதடியேன் ஒழியும் வண்ணம்
மேவாஎன் மரநெஞ்சைப் பலகை யாக்கி
விதியென்னும் கயிறதனு லணைத்துப் பூட்டித்
தேவானை வள்ளியொடும் ஆடீ ரூசல்
செம்மைநெறிச் செல்லமகிழ்ந் தாடீ ரூசல்
மூவாதே வாழ்விசவத் தனைமுன் னேனே
முருகாஎம் பெருமானே ஆடீ ரூசல். (1)

குன்றுதொறு மெழுந்தருளுங் குமரா நெஞ்சக்
குன்றிலெழுந் தருளுவது தகாது கொல்லோ
நின்றிருந்து கிடந்துநடந் தெந்நே ரத்தும்
நின்னடியே தொழும்பெரிய நெறியைத் தாராய்
இன்றிருந்து நாளையிறந் தவம்போ காமே
எழில்விசவத் தனைப்பதியிற் கோயில் கொண்டு
முன்றினில்வந் துளமுருகு வோரைக் காக்கும்
முருகாஎம் பெருமானே ஆடீ ரூசல். (2)

இந்திரனுந் திருமாலும் இருபா லாட
இருமருங்கும் அவர்மகளிர் தழுவிக் கூட
சந்திரனோ டாதவன்விண் முகட்டை மூடச்
சாருமடி யவரன்பு மாலை சூடத்
தந்தனமென் றருள்வரத நடன மாடுந்
தலம்விசவத் தனையாக்கி எம்மை வாட்டும்
முந்துவினை வெயிற்குநிழல் விடுத்துக் காக்கும்
முருகாஎம் பெருமானே ஆடீ ரூசல். (3)

சொட்டுமின்பக் கவிபொழியும் ஔவை கர்வம்
துடைத்தருள அவர்சென்ற வழியின் ஓர்பால்
கட்டுவெயில் வேளையினிற் சிறுவ னாகிக்
கனிநாவல் மரத்திலிருந் தன்னார் கேட்கச்
சுட்டபழம் சுடாதபழம் எவைதாம் வேண்டும்
சொல்களனத் திகைக்கச்செய் தருளால் ஞான
மொட்டலர்த்தி யருள்விசவத் தனையில் அப்பா
முருகாஎம் பெருமானே ஆடீ ரூசல். (4)

சூரபன்மன் சிங்கமுகன் தார கன்பேர்த்
தொல்லசுரர் குலந்தன்னை நினைத்த அந்த
நேரமதில் நீறுக்க முடியு மேனும்
நீரேனோ செருக்களத்தில் ஆறு நாளாய்ப்
போரதனைச் சேனைபுடை சூழ நின்று
புரிந்தீரிஃ துமதுவிளை யாட்டோ என்ன
மூரல்புரிந் தருள்விசவத் தனையில் அப்பா
முருகாஎம் பெருமானே ஆடீ ரூசல். (5)

கன்னியின்மே லோரிளைஞன் மையல் கொண்டு
காதல்வலைப் பட்டுழலும் பான்மை போல
அன்னையிச்சா சக்தியெனும் வள்ளி யம்மை
அருள்பெறநீர் மயங்கியுலைந் தீரே என்பார்
இன்னமுதத் தமிழரின்ப மணமிஃ தென்றே
எடுத்துரைக்கும் செயலன்றோ இனிமை வாய்ந்து
முன்னுமெழில் தவழ்விசவத் தனையில் அப்பா
முருகாஎம் பெருமானே ஆடீ ரூசல். (6)

தேவருக்கும் உணர்வரியாய் ஆடீ ரூசல்
சீரடியார் உணர்பெரியாய் ஆடீ ரூசல்
பாவலர்செந் தமிழ்ப்பாடல் கேட்டு லீலை
பலபுரிந்த தமிழ்முருகா ஆடீ ரூசல்
நாவலமில் குமரகுரு பரனுக் கந்நாள்
நாவிலிருந் தருள்நூல்கள் பாடச் செய்தாய்
மூவருமாய் அருள்விசவத் தனையில் அப்பா
முருகாஎம் பெருமானே ஆடீ ரூசல். (7)

திருவருணைக் கோபுரத்தில் நின்றும் வீழ்ந்து
செத்தொழியா தருணகிரி நாதர் தம்மைக்
குருவடிவாய்த் தோன்றியணைத் தேந்திக் காத்துக்
குலவுதிருப் புகழமிர்தம் நல்கச் செய்தாய்
அருமையுறு பண்பெதுவும் இல்லா நாயேன்
அடியிணையே தஞ்சமென அடைந்தேன் காப்பாய்
முருகலரும் பொழில்விசவத் தனையில் அப்பா
முருகாஎம் பெருமானே ஆடீ ரூசல் (8)

கச்சியப்ப சுவாமிகளுக் கருளிப் பக்தி
கனிந்தசுவை நிறைகந்த புராணங் கேட்டாய்
இச்சகத்தில் கோழியன்றிக் குஞ்சு பாடேன்
என்றபொய்யா மொழிப்புலவன் கர்வம் போக்க
அச்சுரத்தில் நின்றருளி முட்டை பாடும்
ஆளாக்கி விளையாடல் பலவும் செய்தாய்
முச்சகமும் புகழ்விசவத் தனையில் அப்பா
முருகாஎம் பெருமானே ஆடீ ரூசல் (9)

இன்னமுதத் தமிழ்ப்புலவா ஆடீ ரூசல்
இலங்குபுள்ளி மயில்வலவா ஆடீ ரூசல்
கன்னியருக் கொருமுதல்வா ஆடீ ரூசல்
கௌரிமகிழ் தருபுதல்வா ஆடீ ரூசல்
மன்னுமருட் பெருமலையே ஆடீ ரூசல்
வாழ்வளிக்கும் திருநிலையே ஆடீ ரூசல்
முன்னுமெழில் தவழ்விசவத் தனையில் அப்பா
முருகாஎம் பெருமானே ஆடீ ரூசல் (10)

ஓம்

# முருகப்பெருமான் சடாட்சர கீதம்

சரவணபவ சரவணபவ சரவணபவஓம்
சகம்முழுதும் புரப்பவனே ,,
செல்வவிசவத் தனைமுருகா ,,
சிவகுமரா அரிமருகா ,,
அசுரர்குலம் தொலைத்தவனே ,,
அடியருளம் நிலைத்தவனே ,,
தேவரின்சே னபதியே ,,
சிவகதியே தவநிதியே ,,
குறமகள்குஞ் சரிகணவா ,,
குலவுகண பதிதுணைவா ,,
குமரகுரு பரமுருகா ,,
குகசிவசண் முககிருபா ,,
அறகரசுப் பிரமணியா ,,
அருள்புரிசற் குருமணியே ,,
யாவருக்கும் முதியவனே ,,
எவ்வெவர்க்கும் புதியவனே ,,
உருள்கடம்பின் மாலையனே ,,
உணர்வரிய மாலையனே ,,
வெற்றிவடி வேலவனே ,,
வீடருளும் மேலவனே ,,
வேதியர்க்கு வேதியனே ,,
விளங்குமருட் சோதியனே ,,
ஏறுமயில் வாகனனே ,,
இனியஅருள் மோகனனே ,,
அன்புருவே கண்ணியனே ,,
அருளுருவே புண்ணியனே ,,

திருச்சிற்றம்பலம்.

---

உணர்வரிய மாலையன் - அறிதற்கரிய இயல்பினையுடையவன்